# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

# அறிவிப்புகள் 2008-09

**திரு. மு.க.ஸ்டாலின்**
ஊரக வளர்ச்சி மற்றும்
உள்ளாட்சித் துறை அமைச்சர்

## 1. ஊரக கட்டமைப்புத் திட்டம்

1.4.2008 முதல் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப் படுவதால், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் (SGRY) மத்திய அரசால் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, சிறு கட்டிடங்கள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு தற்போது சரியான திட்டம் ஏதும் இல்லை. மேலும், தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சொத்துக்களை நிலைப்படுத்துவதும் அவைகளை நீடித்து நிலைத்திருக்கக் கூடியதாக மாற்றுவதும் அவசியமாகிறது. இது குறித்து பெறப்பட்ட பல்வேறு கோரிக்கைகளை மனதில் கொண்டு, ஊரக கட்டமைப்புத் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தினை 2008–09ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தி அதற்காக இந்த ஆண்டு 350 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 2. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

தமிழ்நாடு அரசு கான்கிரீட் கூரை அமைக்க ஒவ்வொரு வீட்டிற்கும் கூடுதலாக ரூபாய் 12,000/- வழங்கி வந்ததை தாங்கள் அறிவீர்கள். இந்த நிதியாண்டிலிருந்து இத் தொகை 12,000/– ரூபாயிலிருந்து 20,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். மேலும், மத்திய அரசு இந்த ஆண்டு முதல் ஒரு வீட்டிற்கான அலகுத் தொகை 10,000/– ரூபாய் உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்து உள்ளது.

இதனால் புதிய தொகுப்பு வீடு கட்டுவதற்கு 37,000/– ரூபாய் என்று இருந்த அலகுத் தொகை 55,000/– ரூபாய் ஆக உயர்த்தி வழங்கப்படும்.

## 3. தகுதிபெற்ற அனைத்து மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி

நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் 1 இலட்சத்து 50ஆயிரம் மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்கள் தகுதி இருந்தும், சுழல் நிதி மானியம் பெறாமல் உள்ளன. இந்நிலையைக் கருத்தில் கொண்டு இவ்வாண்டு தகுதியான அனைத்து மகளிர் திட்ட சுய உதவிக் குழுக்களுக்கும் 150 கோடி ரூபாய் செலவில் சுழல் நிதி மானியம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு சுய உதவிக் குழுவும் தலா 10,000/– ரூபாய் சுழல் நிதி மானியம் மட்டுமல்லாது வங்கிகள் மூலம் கூடுதலாக 30,000/– ரூபாய் வரை கடனும் பெற வாய்ப்புள்ளது.

## 4. சட்டமன்றத் தொகுதி மறுவரையறைக்கு இணங்க ஊராட்சி ஒன்றிய எல்லைகளை சீரமைத்தல்

அண்மையில் சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்வதற்கு முன்பு, ஒரு சட்டமன்றத் தொகுதி, ஓரிரு ஊராட்சி ஒன்றியங்களை முழுமையாகக் கொண்டதாகவும், ஓரிரு ஊராட்சி ஒன்றியங்களை பகுதியாகக் கொண்டதாகவும் இருந்தது. சட்டமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்யும் போது ஊராட்சி ஒன்றியங்களையோ, ஊராட்சிகளையோ அடிப்படையாகக் கொள்ளாமல் வருவாய் கிராமங்கள், வருவாய் வட்டங்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளபட்டன. அதனால், தற்போதுள்ள சட்டமன்றத் தொகுதியில் சுமார் நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகள் பகுதியாக இடம் பெற்றுள்ளன என தெரியவந்துள்ளது.

இதனால், சட்டமன்ற உறுப்பினர், தனது தொகுதியில் உள்ள பல ஊராட்சி ஒன்றியங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அதுபோல ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களும் இரண்டு, மூன்று சட்டமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றிய எல்லைகளை சட்டமன்ற தொகுதியின் எல்லைக்கு ஏற்றவாறு சீரமைக்க வேண்டுமென பல சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கைகள் வைத்துள்ளனர்.

மேலும், ஊராட்சி ஒன்றியங்களுக்கிடையே ஊராட்சிகளின் எண்ணிக்கை, மக்கள் தொகை, பரப்பளவு ஆகியவற்றில் பெரிய அளவில் வேறுபாடுகள் உள்ளன. கடந்த 45 ஆண்டுகளாக ஊராட்சி ஒன்றிய எல்லைகள் மிகக் குறைந்த அளவில்தான் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், ஊராட்சி ஒன்றிய எல்லைகளை சீரமைப் பதற்கான சரியான தருணம் தற்போது ஏற்பட்டு உள்ளது.

ஏற்கனவே, ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், நிலை குறைத்தல், ஒன்றோடொன்று இணைத்தல், பிரித்தல் ஆகியவை குறித்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அதன்படி மாவட்ட ஆட்சித்

தலைவர்களும் கருத்துக்கேட்பு கூட்டங்களை நடத்தி, ஆய்வு செய்து கருத்துருக்களை தயார் செய்து வருகின்றனர். அத்துடன் ஒரு சட்டமன்றத் தொகுதிக்குள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களின் எல்லைகளும் பகுதியாக இல்லாமல் முழுமையாக அமையும் வகையில் மறுவரையறை செய்ய மாவட்ட ஆட்சியர் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். ஊராட்சி ஒன்றிய எல்லைகள் சீரமைக்கபட்டாலும் தற்போதுள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் பதவிக்காலம் எந்த விதத்திலும் பாதிக்கப்பட மாட்டாது.

2011ம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தலின் போது இது அமல்படுத்தப்படும்.

## 5. பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம்

தமிழகத்தில் சமூக நீதியை மேம்படுத்தவும், சாதி, சமய பேதமற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்கவும், மக்கள் ஒற்றுமையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழ வேண்டுமென்ற தந்தை பெரியார் அவர்களின் எண்ணத்திற்கேற்ப மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமத்துவபுரம் என்ற சீரிய திட்டம் 1997ம் ஆண்டு கொண்டு வரப்பட்டு 145 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டன. தற்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மேலும் 95 சமத்துவபுரங்கள் அமைக்கப்படுமென அறிவித்துள்ளார்கள். அதன்படி முதற்கட்டமாக 2008–09ம் ஆண்டில் 29 புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும். இத்திட்டம் செயல்படுத்துவதற்குத் தேவையான 75 கோடி ரூபாய் நிதியினை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 6. நமக்கு நாமே திட்டம்

வளர்ச்சிப் பணிகளில் மக்களை ஈடுபடுத்தி அவர்களது பங்களிப்போடு பணிகளை மேற்கொள்ளும் நமக்கு நாமே திட்டம் இந்த அரசால் மீண்டும் 2007–08ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்களிடம் இத்திட்டம் நல்ல வரவேற்பை பெற்றுள்ள நிலையில் 2008–09ம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கென இந்த அரசால் 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

வெளி நாடுகளில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்தோர், தமது சொந்த ஊர் மற்றும் அங்குள்ள மக்களுக்கு உதவிட விரும்புகின்றனர். நமக்கு நாமே திட்டம் போலவே இவர்களின் நன்கொடை மூலமாக மேற்கொள்ள விரும்பும் பணிகளைச் செயல்படுத்துவதற்கான பொது அறக்கட்டளை ஒன்றை இந்த அரசு அமைக்கும் என இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்த அறக்கட்டளை அமைக்கப்பட்டு இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்படும்.

## 7. அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

2006–07 மற்றும் 2007–08ம் ஆண்டுகளில் சீரிய முறையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டதைப் செயல்படுத்தப்பட்டதைப் போல 2008–09ம் ஆண்டிலும் 2,521 கிராம ஊராட்சிகளில் 509 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 8. நபார்டு வங்கி நிதி உதவியுடன் சாலைகள் மேம்பாடு

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் ஊராட்சிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதோடு அவ்வூராட்சிகளுக்குச் செல்லும் சாலைகளையும் நபார்டு வங்கி நிதி உதவியுடன் மேம்படுத்தி தார் சாலைகளாக மாற்றி அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

2006–07ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 3,898 கி.மீ. நீளமுள்ள ஊரகசாலைப் பணிகள் 410 கோடி ரூபாய் செலவில் நடைபெற்று வருகின்றன.

அதே போல, 2007–08ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில், நபார்டு வங்கி ஒப்புதலுக்குப் பின்னர் 3,205 கி. மீ. நீளமுள்ள ஊரகச் சாலைப் பணிகள் 409 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

## 9. பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியத்தில் தார் சாலைப் பணிகள்

2006–07 மற்றும் 2007–08ம் ஆண்டுகளில் பன்னிரெண்டாவது நிதி ஆணைய மானியத்தில் பழுதடைந்த ஊரகத் தார் சாலைகளை சீரமைத்தது போலவே இந்த ஆண்டும் 103 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பழுதடைந்த தார் சாலைகள் மேம்படுத்தப்படும்.

## 10. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள சுமார் 27,000 ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பெரும்பாலான பள்ளிகள் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி பழுதடைந்த நிலையில் இருந்தன. இந்தப் பள்ளிக் கட்டடங்களை புதுப்பிக்க ஒரு சிறப்பான திட்டமாக 'ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் சீரமைப்புத் திட்டம்' 2007–08–ம் ஆண்டு துவக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ் 2006–07 மற்றும் 2007–08ம் ஆண்டு அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்ட ஊராட்சிகளில் 10,248 பள்ளிகளில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2008–09ம் நிதியாண்டிலும் இத்திட்டத்தின் கீழ் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்படும் கிராம ஊராட்சிகளில் உள்ள சுமார் 5,000 பள்ளிகளில் கட்டடம் புதுப்பிக்கும் பணிகள் 60 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப் படும்.

## 11. ஊராட்சி ஒன்றியங்களுக்கு சமச்சீர் நிதிப் பகிர்வு

மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே மாநில நிதி ஆணைய மான்யம் பங்கீடு செய்யும் போது பல கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு போதுமான நிதி கிடைப்பதில்லை. இந்நிலையை மாற்ற, கடந்த ஆண்டிலிருந்து ஒவ்வொரு கிராம ஊராட்சிக்கும் குறைந்த பட்சமாக ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் ரூபாய் வழங்கப்படுவது போல, இந்த நிதி ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு குறைந்த பட்சம் 30 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். மீதமுள்ள நிதியினை மக்கள் தொகை அடிப்படையில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பிரித்து வழங்கப்படும்.

## 12. ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டுதல்

பல ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. 2008–09ம் ஆண்டில் முதற்கட்டமாக 50 ஊராட்சி ஒன்றியங்களுக்கு புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுவதற்காக அரசு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யும். இத்திட்டம் படிப்படியாக விரிவுபடுத்தப் படும்.

## 13. ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கு தனி வாகனம்

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் தற்போது இரண்டு வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன. இதில் ஒரு வாகனத்தை, ஊராட்சி ஒன்றியக் குழுத்தலைவர் பயன்படுத்திக் கொள்ளஏதுவாக 100 லிட்டர் எரிபொருள் கூடுதலாக வழங்கப்படுகிறது. எனினும், ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவருக்கென தனியாக ஒரு வாகனம் வழங்க வேண்டும் என்று வரப்பெற்ற கோரிக்கையை அரசு ஏற்று 385 ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் இந்த ஆண்டு வழங்கப்படும். இதற்கான 385 ஓட்டுநர் பணியிடங்கள் புதிதாக தோற்றுவிக்கப்படும்.

## 14. 25,000 இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சி

வேலை வாய்ப்பற்ற இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்ற, தொழிற்பயிற்சி வழங்கப்படும் என்று இவ்வரசு அறிவித்ததின் அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளில் 11,485 இளைஞர்களுக்கு சிறந்த தொழில் நிறுவனங்கள் மூலம் தொழிற் பயிற்சி வழங்கப்பட்டு, வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2008–09ம் ஆண்டில் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு 25,000 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்க 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும்.

## 15. 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலம் இதுவரை 3 இலட்சத்து 65 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு இருப்பினும் 3,644 ஊராட்சிகளில் 25 சதவிகிதத்திற்கும் குறைவான மகளிரே சுய உதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ளனர். எனவே, இவ்வூராட்சி களில் தனி கவனம் செலுத்தி, விடுபட்டுள்ள ஏழை எளிய மகளிருக்கும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் பயனடையும் மகளிருக்கும், முன்னுரிமை அளித்து இவ்வாண்டு 25,000 புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.

## 16. சுய உதவிக் குழு கூட்டமைப்புகளுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம்

ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுப்படுத்த இவ்வரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் கூட்டமைப்புகள் புத்துயிர் பெற்று சிறப்பாக செயல்பட தொடங்கியுள்ளன.

இந்திய ரிசர்வ் வங்கியின் சிறப்பு உத்தரவின் பேரில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சட்ட ரீதியாக பதிவு பெறாமலே வங்கிக் கடன் பெற முடிகிறது. இந்த சலுகை சுய உதவிக் குழுக் கூட்டமைப்புகளுக்கு பொருந்தாது. ஆதலால், இக்கூட்டமைப்புகள் அதிக அளவில் வங்கிக் கடன் பெற ஏதுவாக இவற்றை தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம், 1975–ன் கீழ் பதிவு செய்ய முடிவு செய்யப்பட்டு உள்ளது.

## 17. பணியமைப்பு

- ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள விரிவாக்க அலுவலர் நிலையிலான பணியிடங்களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணி நிலைக்கு உயர்த்திட வேண்டும் என பல ஆண்டுகளாக அரசுக்கு தொடர்ந்து கோரிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நீண்டநாள் கோரிக்கையை அரசு கனிவுடன் பரிசீலித்தது. இத்துறையின் விரிவாக்க அலுவலர் பணியிடங்களை துணை வட்டார வளர்ச்சி அலுவலர் பணி இடங்களாக நிலை உயர்த்திட அரசு முடிவு செய்துள்ளது.

- ஊராட்சிகளில் பணிபுரியும் மக்கள் நலப் பணியாளர்கள் தற்போது ரூபாய் 950 மதிப்பூதியமாகவும், ரூபாய் 50 பயணப்படியாகவும் மொத்தம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,000 பெற்று வருகிறார்கள். இவர்கள் தங்கள் ஊதியத்தை உயர்த்தி வழங்க அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கையின் மீது மைய

அரசின் ஆறாவது சம்பளக் குழுவின் பரிந்துரைகளின் பேரில் மத்திய அரசு ஆணைகள் வெளியிட்டபின் மாநில அரசு அலுவலர்களுக்கு அவற்றை நடைமுறைப்படுத்த அமைக்கப்படும் அலுவலர் குழுவின் பரிந்துரை பெற்று அதன் அடிப்படையில் உரிய ஆணைகள் வெளியிடப்படும்.

➢ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் உள்ள பதிவறை எழுத்தர், அலுவலக உதவியாளர், இரவுக்காவலர் மற்றும் இதற்கு இணையான பதவிகளில் **50** சதவீத காலிப்பணியிடங்கள் தகுதியுள்ள மக்கள் நலப் பணியாளர்களைக் கொண்டு நிரப்ப அரசு பரிசீலிக்கும்.

➢ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் வளர்ச்சிப் பணிகள் தரமாகவும், விரைவாகவும் செயல்படுத்தப்படுவதை உறுதி செய்திட ஏதுவாக கீழ்க்கண்ட பல்வேறு நிலைகளில் **2,643** புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு விரைவில் நிரப்பப்படும்.

| | |
|---|---|
| உதவி செயற்பொறியாளர்கள் | 32 |
| வட்டார வளர்ச்சி அலுவலர் நிலையில் கண்காணிப்பாளர்கள் | 30 |
| உதவிப் பொறியாளர்கள் | 212 |
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் | 385 |
| உதவியாளர்கள் | 415 |
| பணி மேற்பார்வையாளர்கள் | 673 |
| இளநிலை வரைவு அலுவலர்கள் | 32 |
| ஓட்டுநர்கள் | 32 |
| அலுவலக உதவியாளர்கள் | 32 |
| கணினி உதவியாளர்கள் | 800 |

➢ திட்டப் பணிகளை ஆய்வு செய்து, விரைவாகவும், தரமாகவும் நிறைவேற்றுவதற்கு ஏதுவாக உதவி இயக்குநர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் உதவிப் பொறியாளர்களுக்கு 11 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் 250 புதிய வாகனங்கள் வழங்கப்படும்.